**வவுனியா வடக்கு பிரதேச சபை**

-----------------------------------

**வவுனியா மாவட்டம்**

---------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

-------------------------------

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 25 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 05 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 26 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

-----------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

பின்வரும் கூற்றுக்கள் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

அ) நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்படவில்லை.

ஆ) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

ஈ) ஊழியர் கடன் அறவீட்டின் போது மேலதிகமாக அறவிடப்பட்ட ரூபா 3,360 இறுதிக்கடன்பட்டோரின் மீதியில் சீர் செய்யப்படாமையால் ஊழியர் கடன் மீதி ஐந்தொகையில் ரூபா 3,360 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

உ) 2013 இல் சமர்ப்பிக்கப்பட்ட இறுதிக்கணக்குகளுடன் இணைக்கப்பட்ட அட்டவணையின்படி மீளாய்வாண்டின் இறுதியில் முற்பணப் பெறுகைகள் மீதி ரூபா 4,521,716 ஆக உள்ள போதும் ஐந்தொகையில் ரூபா 7,952,480 ஆக காட்டப்பட்டுள்ளது. அத்துடன் பிரதான ஏட்டிலும் பதியப்பட்டிருக்கவில்லை.

ஊ) பயன்பாட்டுச் சேவைக்கான கடன்கள் ரூபா 12,123,017 பிரதான ஏட்டில் பதியப்படவில்லை.

எ) 2013ம் ஆண்டின் நவம்பர், டிசம்பர் மாதங்களிற்கான நீதிமன்ற தண்டப்பணம் இறுதிக்கணக்குகளுக்கு கொண்டுவரப்படாததால் திரண்ட நிதி ரூபா 935,500 ஆல் குறைத்து காட்டப்பட்டுள்ளது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

---

கணக்கு விடயங்கள் தொடர்பான கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,091,238 ஆக இருந்தே அதே வேளை பரீட்சைமீதி/ கடன் பேரேட்டு அறிக்ககளின் பிரகாரம் அந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,532,949 ஆக இருந்தது. இதன் பிரகாரம் வித்தியாசங்களின் கூட்டுத்தொகை ரூபா 441,711 ஆக இருந்தது.

### 1.3.3 பெறவேண்டியவை

---

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகளுக்கு மிகையான பதவியினர் கடன் முற்பண மீதிகள் ரூபா 228,051 ஆக இருந்தது.

1.3.4 கணக்காய்விக்குச் சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------------

(அ)தேவையான சான்றுகளைச் சமர்ப்பிக்கப்படாமையின் ரூபா 4,539,939 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப் செய்யவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

(ஆ)நிலையான வைப்பு பெறுமதி ரூபா 14,922,174 விற்கான நிலையான வைப்பு சான்றிதழ் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.
03.நிதி மீளாய்வு

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------------------------

### 2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி 2013 டிசம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 7,986,015 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகை ரூபா 8,803,885 ஆகவும் விளைந்திருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

----------------------------------

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மையான மற்றும் பெறப்படவேண்டிய வருமானம்

----------------------------------------------------------------------------------------------------------------------------------

நகர சபையால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மையான மற்றும் பெறப்படவேண்டிய வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| வருமான விபரம் | மதிப்பீட்டு வருமானம் | உண்மை வருமானம் | திரட்டிய நிலுவை 31.12.2012 உள்ளபடி |
|---|---|---|---|
| வாடகைகள் | 2,732,000 | 978,681 | 1,753,319 |
| உரிமங்கள் | 219,700 | 158,065 | 61,635 |
| ஏனைய வருமானங்கள் | 15,818,000 | 18,706,475 | - |
| **மொத்தம்** | **18,769,700** | **19,843,221** | **1,814,954** |

**2.3 நீதிமன்ற தண்டப்பணங்கள்**

நீதிமன்றக் தண்டப்பணம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாணசபை பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 935,500 தண்டப்பணம் சபையினால் பெற்றக்கொள்ளப்பட வேண்டியதாக இருந்தது.

**2.4 முத்திரைத் கட்டணங்கள்**

முத்திரைக் கட்டணமாக 2013 திசெம்பர் 31 ல் உள்ளவாறு ரூபா 419,550 தொகைின் பதிவாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது.

**3 .செயற்பாட்டு மீளாய்வு**

**3. 1 செயற்பாட்டு மற்றும் முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

அ) விளம்பரக்கட்டணங்கள் சம்பந்தமாக விளம்பரப்படுத்தப்பட்ட பலகைகளுக்கு அறவிட வேண்டிய கட்டணங்களை அறவிடவும் விளம்பரக்கட்டணங்கள் செலுத்தப்படாத விளம்பரபலகைக்குரிய நிறுவனங்களிடமிருந்து நிலுவையை அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை.

ஆ) நிலையான வைப்பு பெறுமதி ரூபா.14,922,174 ற்கு நிலையான வைப்புச்சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை.

இ) சபையானது 03 கணனி மேசைகளுக்கு ரூபா. 29,853 செலவு செய்யப்பட்ட போதும் இருப்பு பதிவேடல் பதியப்பட்டிருக்கவில்லை.

ஈ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நாளாந்த வாகன ஓட்ட அட்டவணையின் பரீட்சிப்பின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

I. thfdj;ij gad;gLj;jpathpd; Kjnyhg;gk; ,lg;gltpy;iy.

II. சென்றதுாரம், பிரயாணதத்தன சென்ற இடங்கள் தொடர்பான விபரம் போன்றவை நாளாந்த வாகன ஓட்ட அட்டவணையில் குறிப்பிடப்படவில்லை.

III. வாகன புத்தகம் பூரணமாக பேணப்படவில்லை.

### 3.2 <u>பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்திய சொத்துக்கள்</u>

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

அ) 2013 டிசம்பர் 31ல் இலங்கை வங்கியின் கணக்கில் உள்ள மீதி 161,325 ஆக உள்ளதுடன் இம்மீதியானது 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாமலும் உள்ளது.

ஆ) சபையினால் கொள்வனவ செய்யப்பட்ட ரூபா 130,350 பெறுமதியான 237 தூண்கள் 02 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாமல் உள்ளது.

## 04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் பதிவேடுகள் சபையில் பேணப்பட்டிருக்கவில்லை.

அ) நிலையான சொத்து

ஆ) வருமானம்